கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

CC No.186 /2023

நாள். 06.02.2026 எ.த.சா.1 திரு. அரிகிருஷ்ணன்

த/பெ திரு. ராஜபொன் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) புகார்தாரரை எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, புகார்தாரரை எனக்கு தெரியும், கோலியான் குளத்திலுள்ள அவரது தோட்டத்திற்கு வருவார், டீ கடையிலும் சந்தித்துள்ளோம். இது தவிர்த்து எனக்கும் புகார்தாரருக்கு வேறு பழக்கம் இல்லை என்றால் சரிதான், ஆனால் என்னிடமிருந்து புகார்தாரர் இடம் வாங்கியுள்ளார். எனக்கு புகார்தாரரை தெரியும் என்றோ, என்னிடம் அவர் இடம் வாங்கிய விபரத்தை எனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரங்களை கூறாமல் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) வழக்கு காசோலையை நான் யாரிடம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சுஸ்லான் நிறுவனத்திடம் கொடுத்தேன். நான் காசோலையை சுஸ்லான் நிறுவனத்திடம் கொடுத்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் தான் காசோலையை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எனது வங்கி கணக்கில் பணம் இல்லை என எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்படவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக் கொண்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 6 அஞ்சலக அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. ம.சா.ஆ. 6 அஞ்சலக அட்டையில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் தெரியாது. ம.சா.ஆ. 6 அஞ்சலக அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் புகார்தாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான், நான் மட்டும் அல்ல, மற்றொரு நபரும் சேர்ந்து தான்



MITHUNA A KAISER Digitally signed by MITHUNA A KAISER Date: 2026.02.06 15:52:43 +0530

ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். **மேற்படி கிரைய ஆவணத்தின் நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் புகார்தாரருக்கு ரூ 18 லட்சம் பணம் கொடுக்கும் அளவுக்கு தகுதி இல்லை என சாட்சியம் அளித்துள்ளேன், எதனடிப்படையில் தகுதி இல்லை என கூறியுள்ளேன் என்றால் நான் புகார்தாரரிடம் பணம் வாங்க வில்லை, அதனால் அவருக்கு தகுதி இல்லை என கூறினேன்.

4) ம.சா.ஆ. 7 ஆவணத்திலுள்ள படி நான் மற்றும் எனது நண்பரும் சேர்ந்து எவ்வளவு தொகைக்கு நிலத்தை கிரையம் கொடுத்தோம் என்றால் 19,84,900/- தொகைக்கு கிரையம் செய்தோம். 2012 ம் வருடமே புகார்தாரர் இவ்வளவு பெரிய தொகையை கொடுக்கும் அளவுக்கு வசதியானவர் என்றால் சரிதான், ஆனால் எனக்கு அவர் கடன் தரவில்லை. நான் புகார்தாரரிடம் 09.02.2020 அன்று ரியல் எஸ்டேட் தொழிலுக்காக ரூ 18 லட்சம் ரொக்க கடனாக பெற்றுக் கொண்டு தற்போது பணம் பெறவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) புகார்தாரரிடம் ரூ 18 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு தற்போது சுஸ்லான் நிறுவனத்திடம் காசோலை கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க கடமை பட்டவன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.06 15:52:47 +0530